செய்தி வெளியீடு எண்: 435 நாள் 18/08/2014

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழக அரசில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வரும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்கும் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் **திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி** அவர்கள் தலைமையில் இன்று (18/08/2014) சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

--------

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள், மகளிருக்கு வீட்டு பணிகளை எளிதாக்கவும் வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் பங்கேற்று வளம் பெற, நவீன வீட்டு உபயோக சாதனங்களை வழங்கிடும் வகையில், 30.6.2011 அன்றைய நிலையில் பொது விநியோக திட்டத்தின் கீழ் அரிசி பெறத் தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்கள் ஏறக்குறைய 1.85 கோடி மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர்கள் வழங்க ஆணையிட்டார்கள்.

இத்திட்டத்தின்படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டில் 25 இலட்சம், 2012–2013 ஆம் ஆண்டில் 35 இலட்சம், 2013–14 ஆம் ஆண்டில் 35 இலட்சம் என இதுவரை மொத்தம் 95 இலட்சம் பயனாளிகளுக்கு மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள், 2014–15ஆம் ஆண்டிற்கு 45 இலட்சம் மற்றும் 2015–16ஆம் ஆண்டிற்கு 45 இலட்சம் என மொத்தம் 90 இலட்சம் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக 2014–15ஆம் ஆண்டிற்கு ரூ.2000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு பணிகளை முடித்து விரைவில் பயனாளிகளுக்கு வழங்கிட **மாண்புமிகு அமைச்சர்** அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், இத்திட்டத்தின் இலக்கினை விரைவில் அடையும்பொருட்டு, அனைத்து மாவட்டங்களுக்கு தேவைப்படும் எண்ணிக்கை, ஒதுக்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை, அவற்றை பாதுகாப்பாக வைப்பதற்கான கிடங்குகள் பற்றிய விபரம், சேவை மையங்கள் மற்றும் பொருட்களை பயனாளிகளுக்கு விரைந்து விநியோகம் செய்தல் குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி சாந்தினி கபூர், இஆப அவர்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி எம்.பி. நிர்மலா, இஆப., அவர்கள், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு எஸ். கோபாலகிருஷ்ணன், இஆப, அவர்கள், வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை (ம) தணிக்கும் துறை ஆணையர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு பிரதீப் யாதவ், இஆப அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு மா.சந்திரசேகரன், இஆப, அவர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9